பாலைவனச் சோலை
புத்தகம்-8 அத்தியாயம்-1

‘அருண்...அருண்’. ’அரூண்...’

அம்மா கீதாவின் கத்தல் வீட்டின் கீழே இருந்து வந்தது. அன்று பள்ளிக்கூட நாள். அருணின் அறையில் அலாரம் மணி ஒரு பக்கம் அடித்துக் கொண்டிருந்தது. அந்த அலாரம் 5 நிமிடத்திற்கு ஒரு முறை கத்திக் கொண்டு இருந்தது. கீதாவிற்கு இது ஒன்றும் புதிதல்ல. பள்ளிக்கூட நாட்களில் தவறாமல் நடக்கும் கூத்து தான்.

பக்கரூ தன் பாட்டிற்கு மாடியும் கீழேயுமாய் ஓடிக்கொண்டிருந்தது. கீதாவின் கணவர் ரமேக்ஷோ தன் கனவு உலகில் நன்றாக குறட்டை விட்டுக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்தார். அவரால் எப்படித்தான் இப்படி தூங்க முடிகிறதோ என்று கீதாவிற்கு ஒரு பக்கம் வியப்பும், ஒரு பக்கம் எரிச்சலுமாக வந்தது.

’டிங்..டாங்...டிங்...டாங்’. அலாரமும் விட்ட பாடில்லை. கீதா ஆழ்ந்த மூச்சு ஒன்று விட்டு relax செய்து கொண்டார். மெதுவாக மாடிப்படி பக்கமாக சென்றார். மெல்ல ஒரு படி ஏறினார். பிறகு என்ன தோன்றியதோ, சில நொடிகள் யோசித்தபடி அப்படியே நின்றார். அவர் படி ஏறுவதைப் பார்த்து பக்கரூ துள்ளிக்குதித்து மாடிக்கு ஓடியது. கீதாவிற்காக பக்கரூ மேலே சென்று ஒரு எதிர்பார்போடு பார்த்தது.

’லொள்...லொள்’. பக்கரூ கீதாவிற்கு அழைப்பு விட்டது. கீதா முதல் படியில் நின்ற படியே பக்கரூவை பார்த்து புன்னகைத்தார். அது புரியாமல் விழித்தது. கீதா, புன்னகைத்த படியே அப்படியே தனது காலை பின்பக்கமாக வைத்து சமையல் அறைப்பக்கமாக திரும்பிப் போனார். அங்கே தனக்காக இருந்த கப்பில் coffee-யை எடுத்துக் கொண்டு dining table-லில் அமர்ந்து newspaper-ல் இருந்த crossword போட ஆரம்பித்தார். அது அவருக்கு ஒரு Zen moment போல தோன்றியது. தன்னைச் சுற்றி வேத ஒலி ஒலிப்பது போன்று இருந்தது.

அலாரம் அடிப்பது நின்றது. வீடே நிசப்பதமாக இருந்தது. கீதாவும் crossword போடுவதில் மூழ்கிப் போனார்.

சில நிமிடங்கள் கழித்து மாடியில் அருண் அறையிலிருந்து சத்தம் கேட்டது. தபதப வென்று அவன் ஓடுவது கேட்டது. கீதா ஒன்றும் சொல்லாமல் தன் வேலையில் மும்முரமாக இருந்தார்.

’அம்மா...அம்மா.’ மாடியிலிருந்து அருணின் சத்தம் கேட்டது. கீதா ஒன்றும் கேட்காதவர் போல இருந்தார்.

’அம்மா...அம்மா...எங்க என்னோட school planner? நேத்திக்கு ராத்திரி இங்க தானே இருந்தது. Shoot…it’s very late. I got to be at school in 10 minutes. இந்து அலாரம் எல்லாம் ஒரே வேஸ்டு. சரியாவே அடிக்காது, தேவைப்படும் போது.’

கீதாவிற்கு அருண் பேச்சைக் கேட்ட போது சிரிப்பாக வந்தது. சில நிமிடங்கள் வீட்டில் ஒரு பிரளயமே வந்தது போல இருந்தது. அருண் மாடிப்படிகளில் குதித்து வேகமாக இறங்கி வந்தான்.

’அம்மா, எனக்கு school-க்கு late ஆச்சுன்னு தெரியாதா உனக்கு? என்ன சீக்கிரமே எழுப்பி விட்டுருக்கலாமே? அந்த அலாரம் வேற அடிக்கவே இல்ல.’

அருண் தனக்கு வேண்டும் என்றால் எதையும் செய்து கொள்வான். அது மாதிரி சமயங்களில் மற்றவர்களைப் பற்றி கொஞ்சம் கூட கவலைப் பட மாட்டான்.

'அம்மா, breakfast எங்கே? By the way, school planner என் பையிலேயே இருந்தது.'

கீதா மௌனமாக இருந்தார்.

'அம்மா...அம்மா. உங்களைத்தான் கேட்டேன். காதுல விழலையா?'

கீதாவிற்கு பட்டென்று கோபம் வந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டார். பழைய கீதாவாக இருந்திருந்தால் வீடே அதிரும்படி ஒரு கத்து கத்திருப்பார். தற்போது சிறிது மாதங்களாக அவர் zen முறைப்படி தியானம் செய்ய ஆரம்பித்திருந்தார். அதன் நன்மைகள் அவருக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. அவரால் தனது கோபத்தை அழகாக கட்டுப்படுத்த முடிந்தது. தன்னால் எதைக் கட்டுப்படுத்த முடியுமோ அதை மட்டுமே அவர் பண்ணினார். வீணாக மற்ற எதையும் பத்தி அவர் கவலைப்படவில்லை.

சமையல் அறையில் அருண் பாத்திரம் உருட்டும் சத்தம் கேட்டது. அவன் போக்கிலேயே விட்டு விட்டார்.

'அம்மா, peanut butter எங்கே?'

அருணின் சத்தமான கேள்வி உள்ளே இருந்து வந்தது.

'அம்மா, bagel or bread? எது எடுத்துக்கனும் இன்னைக்கு?'

அருண் கேட்ட ஒரு கேள்விக்கும் பதில் கொடுக்காமல் தான் crossword போடுவதில் மும்மரமாக இருந்தார்.

'அம்மா, what is wrong with you? I am getting late to school."

தன் அருகில் இருந்த ear pods-யை எடுத்து காதில் போட்டுக் கொண்டார். தனது cellphone-ல் இருந்து பக்திப் பாடல்களை கேட்க ஆரம்பித்தார். மிகவும் குறைந்த volume-ல் வைத்திருந்ததால் தன்னைச் சுற்றி நடக்கும் அனைத்து ஆர்பாட்டங்களும் அவருக்கு காதில் விழுந்தது.

அப்பொழுது மாடிப்படியில் ஆள் அரவம் கேட்டது. ரமேஷ் தூக்க கலக்கத்தில் கொட்டாவி விட்டபடி இறங்கினார்.

'என்ன கீதா, காப்பி இருக்கா? என்ன அருண் இன்னும் school-க்கு கிளம்பலையா? கீதா, என்ன நீ நேரமானது கூட தெரியலையா? அப்புறம் அவனுக்கு tardy notice கிடைச்சா நாம தான போகனும் அவன் school-க்கு.'

ரமேஷ் அடுக்கு அடுக்காக கேள்விகள் கேட்டார். கீதா ஆழ்ந்த மூச்சு விட்டு தன் வேலையில் இருந்தார். அருணும், ரமேஷும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அருண் செய்கையால் தன் அம்மா உட்கார்ந்து இருக்கும் பக்கம் காட்டி, 'கப் சிப்' என்று அப்பா ரமேஷிடம் காண்பித்தான். இனி ஒன்றும் ஆகாது என்று இருவரும் தனக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தார்கள்.

அருண் நொடிகளில் அங்கிருந்து school-க்கு கிளம்பினான்.

'Bye mom. See you in the evening. I got everything I need."

"Bye, கண்ணா.'

வாசல் நோக்கி ஓடியவன் சட்டென்று நின்றான்.

'Wow! அம்மா, you do hear! Thank goodness!"

"Yep, selective hearing. Like both of you." கீதா புன்னகையோடு அருணைப் பார்த்து கண் சிமிட்டினார்.

அருண் கிளம்பிப் போனான். கீதா தன் காதில் இருந்த ear pods-யை எடுத்து table மேல் வைத்தார். ரமேக்ஷ் தனது coffee கப்பை எடுத்துக் கொண்டு கீதாவின் அருகில் இன்னொரு chair-ல் உட்கார்ந்தார். சுர் சுர் என்று உரிஞ்சினார். கீதா முகம் சுளித்தார். ரமேக்ஷ் கவனித்தபாடில்லை. இன்னும் உற்சாகமாக கப்பில் இருந்த coffee-யை உரிஞ்சினார்.

'கொஞ்சம் சத்தம் போடாம குடிக்கலாமே?'

ரமேக்ஷ் ஏதோ ஒரு உலகத்தில் இருந்தார். கீதா கேட்டுக்கொண்டது அவர் காதில் விழவில்லை. அவர் இன்னும் உற்சாகமாக உரிஞ்சி உரிஞ்சி குடித்தார்.

'இதுல தான் ஒரு ருசி இருக்கு கீதா. Coffee-னா Bru coffee தான். பேக்ஷ் பேக்ஷ் ரொம்ப நல்லா இருக்கே! Wow! Great to the last drop.'

தான் பாட்டுக்கு ஜோக் அடித்துக் கொண்டு சிரித்துக் கொண்டார் ரமேக்ஷ். அது மட்டும் இல்லாமல், இன்னும் அதிகமாகவே ரமேக்ஷ் உரிஞ்சினார். கீதாவிற்கு எரிச்சல் வந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் மீண்டும் பெருமூச்சு விட்டுக் கொண்டார். கொஞ்ச நாட்களாகவே தான் follow பண்ணும் Zen முறை தியானம் அவருக்கு மிகவும் நிம்மதி குடுத்தது. இப்பொழுது எல்லாம் கீதா எதற்க்கும் கத்துவதே இல்லை. நடப்பது நடக்கட்டும் என்று விட்டு விடுகிறார்.

'என்ன கீதா, crossword போடறீயா?' தன் பக்கமாக newspaper-யை இழுத்துக் கொண்டு கேட்டார் ரமேக்ஷ்.

கீதா மௌனமாக இருந்தார். அது அவரது "Me Time". யாருடனும் அவர் பேச விரும்பவில்லை. தன் கையில் இருந்த பென்சிலை வைத்து சில நொடிகள் தட்டியபடி இருந்தார். ரமேக்ஷோ குழந்தை போல ஒன்றும் புரியாமல் நடந்து கொண்டார்.

'1 down, Annoy. கீதா போடு. 3 across, Pester. 7 across, Irritate. ம்...அதையும் போடு.' ரமேக்ஷ் அடுக்கிக் கொண்டே போனார்.

அதற்கு மேல் கீதாவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஒன்றும் சொல்லாமல் newspaper-யை எடுத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தார். பின்புற கதவை திறந்து அங்கே வெளிப்புறம் இருந்த chair-ல் உட்கார்ந்து தனது zen தியானத்தை crossword போடுவதில்

தொடர்ந்தார். ரமேக்ஷ், ஏதோ சொல்ல நினைத்தவர் வாயை மூடிக்கொண்டார் எதற்கப்பா வம்பு என்று. ரமேக்ஷ் தன் வேலையைக் கவனிக்க மாடிப்பக்கம் சென்றார்.

சிறிது நேரம் சென்றது. வீட்டின் உள்ளே சுவர் கடிகாரம் 8 முறை அடித்தது. கீதாவும் தான் வேலைக்கு கிளம்ப தயாரானார். வீட்டின் பின் புறத்திலிருந்து உள்ளே வந்தபோது அங்கே ரமேக்ஷைக் காணவில்லை. அவர் குடித்த கப் அப்படியே dining table மீது இருந்தது. அதை எடுத்து kitchen sink வரை கொண்டு போனார். பின்னர் என்ன தோனியதோ, திரும்பி வந்து அந்த கப்பை எடுத்த இடத்தில் அப்படியே வைத்தார்.

'I am not a housekeeper. Nope. I am not here to clean up other's mess. This is Geetha 2.0. A brand new version.' பெருமிதத்துடன் ஒரு மூச்சு விட்டு அங்கிருந்து நகர்ந்தார். "Zen works! What a wonderful day to start."

கீதா தன் அறைப்பக்கம் மாடிப்படி ஏறி சென்றார். தன்னை அலுவலகம் போக தயார் படுத்திக் கொண்டு மாடியிலிருந்து இறங்கி வந்தார். ரமேக்ஷ் எங்கே என்று நோட்டம் விட்டார். எங்கேயும் கண்ணில் தென்படவில்லை. ஒரு post-it note-யை எடுத்து அதில் சில குறிப்புகளை எழுதினார். எழுதியபின் refrigerator மீது அதை கண்ணில் தென்படும்படி ஒட்டினார். பின்னர், கார் சாவியை எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்து கிளம்பினார்.

காரில் உட்கார்ந்து வண்டியை கிளப்பும் முன்னர், தற்செயலாக cellphone-ல் text messages check செய்தார். அதில் அருணிடம் இருந்து சில வந்திருந்தன. அப்பவே படிப்பதா வேண்டாமா என்று யோசித்தார். மணி என்ன என்று பார்த்தார். 8.30 ஆக 5 நிமிடம் இருந்தது. அருணின் text message-யை படித்தார்.

"Mom. Sorry about cutting into your "me time" this morning. BTW, I noticed a press ad in our newspaper that is very interesting. I want to talk to you later this evening. BFN."

உடனேயே பதில் அனுப்பினார். தனக்குத் தானே சிரித்துக் கொண்டார்.

'No worries. Take it easy. Can't wait to talk."

அருண் குறிப்பிட்டது என்னவாக இருக்கும் என்ற யோசித்தபடி, அலுவலகம் போக வண்டியை கிளப்பினார்.

--- அத்தியாயம் முடிவு ---